14

# ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல்வேளை

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #4*

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல் (தொடர்கிறது).*
   D. *(யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).*
   E. *(கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).*
   F. *(கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.*
   A. *இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.*
      1. *தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).*
      2. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).*
   B. *யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).*

### அறிமுகம்

*ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல்வேளை உண்டு என்று கூறப்படுகிறது. முந்திய பாடங்களில், இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்தில் நாம் பல "முதலாவது" நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளோம், ஆனால் இந்தப் பாடமானது அவற்றினால் நிறையப்பட்டதாக உள்ளது.*

*கிறிஸ்துவின் ஊழியத்தின் தொடக்க நாட்கள் "மறைவாயிருந்த காலம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டு எழுத்தாளர்கள் இயேசுவின் வெளியரங்கமான ஊழியம் பற்றிய தங்களின் அறிக்கைகளை, கலிலேயா வில் பின்னாட்களில் அவர் பெற்ற வெற்றியின்மீது கவனம் செலுத்தித் தொடங்கினார்கள். முந்திய, குறைவாகக் காட்சிக்குட்படும் நாட்கள் பற்றி நாம் அறிய வேண்டும் என்று யோவான் விரும்பினார்.*

### முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51)

*"சமீபித்திருக்கிறது!" என்ற பாடமானது இயேசுவைப் பற்றி*

*யோவானின் முதல் சாட்சியத்துடன் முடிவு பெற்றது: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!" (வ. 29). அடுத்த நாளில், யோவான் தமது இரு சீஷர்களுடன் இருந்தார். அவர்களில் ஒருவர், சீமோன் பேதுருவின் சகோதரரான அந்திரேயா (வ. 40) என்பவராயிருந்தார். இன்னொருவர், அநேகமாக நான்காம் சுவிசேஷ விவரத்தை எழுதிய யோவானாக இருந்திருப்பார்.[2] ஏதோ சில காரணங்களினால் யோவான் தமது பெயரை குறிப்பிடத் தயங்கினார்.[3]*

*இயேசு நடந்து செல்லுகையில் பிரசங்கியார் மறுபடியும், "இதோ, தேவ ஆட்டுக்குட்டி!" (வ. 36) என்று கூறினார். அவரது இரண்டு சீஷர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றிச் சென்று அந்த நாளை அவருடன் செலவிட்டார்கள் (வ. 37-39). வேத வசனப் பகுதியானது பின்வருமாறு காலவேளையைத் தருகிறது: "பத்து மணி வேளை" (வ. 39). யோவான் யூதர்களின் காலக் கணக்கு முறையைப் பயன்படுத்தினார் என்றால், இது மாலை சுமார் நான்கு மணியாக இருந்திருக்கும்.[4] அவர் ரோமர்களின் காலக் கணக்கு முறையைப் பயன்படுத்தினார் என்றால், இது காலை 10.00 மணியாக இருந்திருக்கும்.[5] பெயர் குறிப்பிடப்படாத சீஷர் யோவான்தான் என்று யூகித்தால், அவர் மிகச் சரியான நேரத்தை நினைவில் வைக்கும் அளவுக்கு இந்த நிகழ்ச்சி மிகவும் நினைவுக்கூரத்தக்கதாக இருந்தது.*

*இயேசுவுடன் பல மணி நேரங்கள் இருந்த பிற்பாடு, அந்திரேயா தமது சகோதரரான சீமோனைக் கண்டு, அவரைக் கிறிஸ்துவிடம் அழைத்து வந்தார் (வ. 40-42). மற்றவர்களை இயேசுவிடம் அழைத்து வருதல் என்பது அந்திரேயாவின் திறமைகளில் ஒன்றாக இருந்தது (யோவா. 6:8, 9; 12:20-22ஐக் காணவும்). சீமோனிடத்தில் அந்திரேயாவின் வார்த்தைகள் குறிப்பிடத்தக்கவைகளாய் இருந்தன: "மேசியா(இதை மொழிபெயர்க்கையில் கிறிஸ்து என்று அர்த்தப்படுகிறது)வைக் கண்டோம்" (1:41). இயேசுவின் முதல் சீஷர்கள் அவர் யார் என்பதைப் புரிந்துணர்ந்து கொண்டார்கள் (வ. 45, 49 ஆகியவற்றையும் காணவும்).[6]*

*இயேசு சீமோனைச் சந்தித்தபோது, அவர் இனி "கேபா" அல்லது "பேதுரு" என்று அழைக்கப்படுவார் என்று கூறினார். இவற்றில் முதல் பெயர் அரமாயிக் மொழியிலானதாகும், இரண்டாவது பெயர் கிரேக்க மொழியிலானதாகும்; இரண்டுமே "கல்" என்று அர்த்தப்படுகின்றன. இயேசு நம் எல்லாரிலும் உள்ள சாத்தியக்கூறுகளைக் காண்கிறது போலவே, இந்த மனிதரில் இருந்த சாத்தியக்கூறுகளையும் கண்டார்.*

*அடுத்த நாளில், இயேசு கலிலேயாவுக்குத் திரும்புவதற்கு ஆயத்தமான வேளையில், அவர் யோவான் ஸ்நானனுடைய இன்னொரு சீஷராக இருந்திருக்கக் கூடிய பிலிப்புவைக் கண்டார். அப்போதும் இப்போதும் சீஷத்துவத்திற்கான இயேசுவின் அழைப்பானது "என்னைப் பின்பற்றுங்கள்" (வ. 43) என்பதாகவே உள்ளது. பிலிப்பு உடனடியாக நாத்தான்வேல் என்ற பெயர் கொண்ட ஒரு நண்பரைக் கண்டு, அவரை இயேசுவிடம் அழைத்து வந்தார் (வ. 45, 46).*

*கிறிஸ்து, நாத்தான்வேலின் பண்பு மற்றும் அவரின் வாழ்வு பற்றிய விவரங்களை வெளிப்படுத்தியதின் மூலம் அவரைத் திகைப்படையச்*

*செய்தார் (வ. 47-49). இயேசு அவரிடம், "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" என்று கூறினார் (வ. 50).[7] நாத்தான்வேல் யார் என்று நிச்சயமாக நமக்குத் தெரியவில்லை, ஆனால் இவர் இயேசுவின் பன்னிரு அப்போஸ் தலர்களில் ஒருவரான பர்த்தொலொமேயு என்பவர்தான் என்று நினைக்கப் படுகிறது.[8]*

*இவ்விதமாக இயேசு தமது முதல் சிறு குழுவினரான சீஷர்களை ஆதாயப்படுத்தினார் (2:2ஐக் காணவும்).[9] "சீஷன்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ''கற்றுக் கொள்பவர்'' என்ற அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இது ஒருவரிடத்திலிருந்து கற்றுக்கொள்வதற்காக அவரைப் பின்பற்றும் இன்னொருவரைக் குறித்தது. இயேசு நம் எல்லாரையும் அவரது சீஷர்களாகக் கொண்டிருப்பார்.[10]*

## *முதல் அற்புதம் (யோவா. 2:1-11)*

*இயேசுவும் அவரது சீஷர்களும் வடக்குமுகமாய்க் கலிலேயாவை நோக்கிப் பயணமானார்கள். மூன்றாவது நாளில், அவர்கள் கலிலேயாவின் கானாவூருக்குச் சென்று சேர்ந்தார்கள், இது நாசரேத்தூரின்[11] அண்மையில் இருந்ததும், நாத்தான்வேலின் சொந்த ஊருமாகிய (யோவா. 21:2) ஒரு கிராமம் ஆகும். அவர்கள் அங்கு ஒரு திருமண வைபவத்தில் கலந்துகொள்ள வந்திருந்தார்கள் (2:1, 2). இயேசு, தாம் இரட்சிக்க வந்திருந்த மக்களின் வாழ்வில் தம்மையே ஈடுபடுத்திக் கொண்டவராக இருந்தார்.*

*இயேசுவின் தாயாகிய மரியாளும் அங்கிருந்தார் (வ. 1). தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள், மரியாள் திருமணப் பந்தியில் பணிவிடை செய்ய உதவியதைச் சுட்டிக்காண்பிக்கின்றன (வ. 3, 5 ஆகியவற்றைக் காணவும்). ஒருவேளை, ஒரு உறவினர் அல்லது ஒரு நண்பரின் திருமணமாய் இருந்திருக்கும்.*

*வைபவத்தின் மத்தியில், விருந்துணவுப் பொருள் தீர்ந்து போயிற்று. எதிர்பார்த்ததற்கும் மேலாக மக்கள் வந்து இருக்கலாம். எவ்வகையிலும், அது மிகவும் சங்கடப்படுத்தக் கூடிய சூழ்நிலையாக இருந்தது. மரியாள் தம் மகனிடம் வந்து, ''அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை'' (வ. 3) என்று கூறினார். அவர் என்ன செய்யும்படியாக மரியாள் எதிர்பார்த்தார் என்று நாம் அறிவதில்லை; ஏனெனில், அவர் இதற்கு முன்பு அற்புதம் எதுவும் செய்தது இல்லை (வ. 11). ஆயினும், மரியாள் பல ஆண்டுகளாக அவரைச் சார்ந்திருந்தார் மற்றும் அவரால் ஏதாவது செய்ய முடியும் என்று மரியாள் நினைத்தார்.*

*இயேசுவின் பதில் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது: "ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன? என்வேளை இன்னும் வரவில்லை''[12] (வ. 4). அந்த சமுதாயத்தில் ஒருவர் தம் தாயை "ஸ்திரீயே" [பெண்ணே] என்று அழைத்தல் என்பது அவமானப்படுத்துவதாக இருந்தது இல்லை.[13] (இதே சொற்றொட ரானது பிற்பாடு மென்மையுடன் பயன்படுத்தப்படும் [யோவா. 19:26].) இருந்த போதிலும், கிறிஸ்துவின் வார்த்தைகள் ஒரு மென்மையான கண்டனமாக இருந்தன. எர்னஸ்ட் ஹவுஸர் அவர்கள், இது ''இயேசு*

மரியாளின் மகனாயிருந்தபோதிலும், மரியாளை 'சார்ந்தவராக' இருப்ப தில்லை என்ற புரிந்துணருதலுக்காக மரியாளைக் கடினமாக்குவதை'' அர்த்தப்படுத்தும் மூன்று கடிந்துரைகளில் ஒன்றாக இருந்தது என்று எழுதினார். ஹவுஸர் அவர்கள், இவ்விடத்தில் கிறிஸ்துவின் கூற்றானது "இனி முதற்கொண்டு அவரது பூமிக்குரிய பிணைப்பானது தளர்த்தப்பட வேண்டியதாயிருக்கிறது என்பதைக் கவனிக்கப் பயன்படுகிறது" என்றும் கூடுதலாகக் கூறினார்.[14]

இயேசுவின் பதிலுரையால் மரியாள் தடைசெய்யப்படாதிருந்தார். அவர் அங்கிருந்த வேலைக்காரர்களிடத்தில், "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்" என்று கூறினார் (வ. 5) - இது எவர் ஒருவருக்கும் நல்ல அறிவுரையாக உள்ளது! இயேசு தமது அற்புத வல்லமையின் இந்தப் பயன்பாடானது, வேலைக்காரர்கள் மட்டுமே அதை அறிந்திருக்கும் வரையிலும், (நன்மை செய்தல் என்ற) அவற்றின் நோக்கங்களுக்குச் சீர்பொருந்தாததாக இராது என்றும் தமது (அவரது மரண காலமாகிய) ''வேளையைத்'' துரிதப்படுத்தாது என்றும் தீர்மானித்தார் என்பது உறுதி. அப்போது அவர், தண்ணீரை திராட்ச ரசமாக்கிய நன்கு அறியப்பட்ட அற்புதத்தைச் செய்தார் (வ. 6-10).

இந்த நிகழ்ச்சியானது, மதுபான வகைகளைப் பயன்படுத்துவதற்கு இயேசு சம்மதம் தெரிவித்து ஆதரித்தார் என்று நிரூபிக்கிறதா அல்லவா என்பது பற்றி விவாதங்கள் மிகவும் எழும்பியிருக்கின்றன. ஒரு சாரார், ''திராட்சரசம்'' என்ற வார்த்தையையும் வசனம் 10ல் பதிவு செய்யப் பட்டுள்ள குறிப்புரையையும் வலியுறுத்துகின்றார்கள். இன்னொரு சாரார், இயேசு, 540 லிட்டர் முதல் 810 லிட்டர் வரையிலான மதுபானத்தை உண்டாக்கினார் என்று குறிப்பிட்டுள்ளார்கள்;[15] அந்தத் திராட்ச ரசமானது போதை தரக்கூடிய பொருளைக் கொண்டிருந்தது என்றால்,[16] அவர் மதுபானம் அருந்தும் பழக்கத்தை உற்சாகப்படுத்துபவராக இருந்திருக்க வேண்டும் - இந்தப் பழக்கம் வேதாகமம் முழுவதிலும் கண்டனம் பண்ணப் பட்டுள்ளது (நீதி. 20:1; கலா. 5:21). ஆயினும் இது இந்தக் கேள்விக்குத் தீர்வளிக்க பயன்படுத்தும் வசனப்பகுதியாக இருப்பதில்லை.[17] ''திராட்சரசம்'' (oinos) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது திராட்சரசத்திற்கான பொதுவான வார்த்தையாக உள்ளது, இது திராட்சப் பழத்திலேயே இருக்கும் சாற்றினைக் குறிக்கக் கூடப் பழைய ஏற்பாட்டில்[18] பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசா. 65:8).

இப்படிப்பட்ட வழக்காடுதல்கள் இவ்வசனத்தின் கருத்தைத் தவற விடுகின்றன: அமைதியாக, ஏறக்குறையக் கவனிக்கப்படாத நிலையில், மறைவான ஒரு சிறிய கிராமத்தில், இயேசு தமது ஆவிக்குரிய தசைகளைத் தளர்த்தத் தொடங்கினார். அவர் தமது முதல் அற்புதத்தை நிகழ்த்தி யிருந்தார்!

இன்றைய நாட்களில் நாம் "அற்புதம்" என்ற வார்த்தையை குறிப்பிடத் தக்க ஏதாவதொன்றைக் குறிப்பிடுவதற்காக முன் முயற்சியற்ற வகையில் பயன்படுத்துகின்றோம். வேதாகமம் இந்த வார்த்தையை இயற்கைக்கு மேலான செயல் ஒன்றைக் குறிப்பதற்காக விசேஷித்த வகையில் பயன்படுத்

*துகிறது. இயேசு தமது வாழ்வின் முதல் முப்பது ஆண்டுகளில் குறிப்பிடத் தக்கவற்றை மிக அதிகமாய்ச் செய்திருப்பார் என்பது உறுதி, ஆனால் இதுதான் அவர் தமது இயற்கைக்கு மேலான வல்லமைகளைப் பயன் படுத்திய முதல் வேளையாக இருந்தது. நாம் இயல்பான ஒரு உலகத்தில் வாழ்வதால், இயற்கைக்கு மேலானவற்றை விளக்கியுரைத்தல் என்பது நமது திறமைக்கு அப்பால் உள்ள விஷயமாக இருக்கிறது. விசுவாசத்தினால் நாம் இந்தப் பாடக்கருத்து பற்றி வேதாகமம் கூறுவதை ஏற்றுக் கொள்ளுகின்றோம்.*

*இந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பை யோவான் தவறவிடாதிருந்தார். அவர் அற்புதத்திற்கான தமது பிரியமிகுந்த* "sign"[19] *[தமிழ் வேதாகமத்தில் இது "அற்புதம்" என்றே உள்ளது] என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் (வ. 11அ). இயேசு செய்தது, அவர் உண்மையிலேயே தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதற்கு ஒரு அடையாளமாய் இருந்தது! கிறிஸ்து "தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்" என்பதாக யோவான் குறிப்பிடுகிறார் (வ. 11அ)! இது அவர் செய்யவிருந்த பலத்த செய்கைகளில் முன் சுவையாக இருந்தது. மற்றும் இந்த முதல் "அற்புதத்தின்" விளைவாக, "அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (வ. 11ஆ). மேசியா என்ற வகையில் இயேசுவின்மீது அவர்கள் கொண்ட விசுவாசமானது ஆழப்படுத்தப்பட்டது!*

## *கப்பர்நகூமில் முதலாவது தங்கியிருத்தல் (யோவா. 2:12)*

*கானாவூரில் இருந்து இயேசு வடக்கு மற்றும் கிழக்கு திசைகளில் பயணம் செய்தார்.[20] "அதன்பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷர்களும் கப்பர்நகூமுக்குப் போய் அங்கே சிலநாள் தங்கினார்கள்" (வ. 12). கப்பர்நகூம் ஒரு சுறுசுறுப்பான வியாபார நகரமாக இருந்தது, இது பேதுரு மற்றும் அந்திரேயாவின் சொந்த ஊரான பெத்சாயிதாவுக்கு அண்மையில் கலிலேயாக் கடலோரத்தில் இருந்த ஒரு நகரம் ஆகும் (யோவா. 1:44).[21] அந்த நகரம், பலஸ்தீனத்தைக் கடந்துசென்ற பிரதானமான கிழக்கு - மேற்கு சாலைக்கு அருகாமையில் இருந்தது. பிற்பாடு இது இயேசுவின் இயக்கங்களுக்கு மையப்பகுதியாக விளங்கவிருந்தது (மத். 4:13).*

## *முதல் பஸ்கா (யோவா. 2:13-25)*

*இயேசு, கப்பர்நகூமில் தமது பயணத்தை குறுகலாக முடித்துக் கொண்டு, பஸ்கா பண்டிகையில் கலந்து கொள்ளச் சென்றார்.[22] இயேசு தமது பன்னிரெண்டு வயது முதல் இந்தப் பண்டிகையில் தவறாது கலந்து கொண்டார் என்று நாம் தைரியமாய்க் கூறலாம் (லூக். 2:41, 42), ஆனால் இது அவரது வெளிப்படையான ஊழியத்தில் முதலாவது பஸ்காவாக இருந்தது.[23] இது அவரது ஊழியம் தொடங்கியதிலிருந்து அவர்*

*வெளிப்படையாகத் தோற்றமளித்த முதலாவது நிகழ்ச்சியாகவும் இருந்தது. இது அவர் தேவாலயத்தை முதன் முறை சுத்திகரித்தல் என்ற நிகழ்ச்சியுடன் நாடக பாணியில் தொடங்கிற்று![24]*

*உலகம் முழுவதிலும் இருந்து யூதர்கள், பிரதானமான யூதத்துவப் பண்டிகைகளுக்காக எருசலேம் நகருக்கு வந்ததின் விளைவாக, தேவாலய மானது வர்த்தக மையமாகியிருந்தது (அப். 2:5, 9-11அ ஆகியவற்றைக் காணவும்). ஒவ்வொரு யூதரும் தேவாலய வரியாக ஆண்டுதோறும் அரைசேக்கல் மதிப்புள்ள நாணயத்தைச் செலுத்தும்படிக்கு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.[25] இந்த வரியை அந்நிய நாட்டுப் பணமதிப்பில் செலுத்துவதை தேவாலய அதிகாரிகள் அனுமதிப்பதில்லை, எனவே பணம் மாற்றுபவர்கள் தேவைப்பட்டனர். ஒவ்வொரு யூதரும் பண்டிகை நாட்களின்போது, குறிப்பிட்ட மிருகபலியை செலுத்த வேண்டியிருந்தது.[26] மற்ற நாடுகளில் இருந்து வந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களுடன் மிருகங்களைக் கொண்டு வர முடியாது இருந்தது, எனவே அவர்கள் அங்கு வந்து சேர்ந்தபின்பு அவற்றை வாங்க வேண்டியிருந்தது. இவ்விதமாக, தேவாலயத்தில் மிருகங்களை விற்கும் பழக்கம் தொடங்கிற்று. இத்தொழில்கள் யாவையும் புறஜாதியாரின் மண்டபத்தில் நடைபெற்றன என்பது தெளிவு.[27] இவைகள் உலகெங்கிலும் இருந்து அங்கு பயணமாகி வந்தவர்களுக்குச் சேவை செய்தல் என்ற நோக்கத்துடன் தொடங்கியிருக்க லாம், ஆனால் அவை ஆசாரியர்களால் கட்டுப்படுத்தப்பட்டு, பணம் சம்பாதிக்கும் திட்டமாகச் சீரழிக்கப்பட்டிருந்தன.*

*இயேசுவின் முதல் வெளியரங்கமான நடவடிக்கையானது தேவனு டைய வீடு மற்றும் தேவனுடைய சித்தம் ஆகியவற்றின் மீது அவரது வைராக்கியம் பற்றிய எடுத்துரைப்பாக உள்ளது. அவர் அந்த வியாபாரி களை விரட்டியபோது, "என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்கா திருங்கள்" (வ. 16ஆ) என்று கூறினார். பிற்பாடு இதே போன்ற ஒரு நிகழ்ச்சியில், அவர் " 'என்னுடைய வீடு ஜெபவீடு' என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் 'கள்ளர்' குகையாக்கினீர்கள்" (மத். 21:13) என்று கூறவிருந்தார்.*

*இயேசுவின் முதல் வெளியரங்கமான நடவடிக்கையானது, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட அவரது அதிகாரத்துவத்தைப் பற்றிய ஒரு எடுத்துரைப் பையும் ஏற்படுத்திற்று (மத். 3:17; மத். 7:29ஐக் காணவும்). கலவரம் அடைந்த தேவாலய அதிகாரிகள் அவரது அந்த அதிகாரத்துவத்திற்கு அறைகூவல் விடுத்தனர்.* The New Living Translation *என்ற வேதாகமத்தில், யோவான் 2:18 வசனமானது, "இவைகளைச் செய்வதற்கு உமக்கு என்ன உரிமை உள்ளது?" என்று தரவழைத்துள்ளது. "யூதத்தலைவர்கள், 'இந்த அதிகாரம் உமக்குத் தேவனிடத்திலிருந்து வந்தது என்றால், அதை நிரூபிப்பதற்கு எங்களுக்கு ஒரு அற்புத அடையாளத்தைக் காண்பியும்' என்று வற்புறுத்தி னார்கள்."*

*இயேசுவைக் கண்டு அவரை விசுவாசிக்க விருப்பம் உள்ளவர்களுக்கு, அவர் தமது ஊழியத்தின் போது பல அடையாளங்களைத் தரவிருந்தார் (வ. 23ஐக் காணவும்), ஆனால் உயிர்த்தெழுதல் என்பதுதான் மிகவும்*

*தனிச்சிறப்பு வாய்ந்த அற்புதமாக இருக்கும் (ரோமர் 1:4). இவ்விதமாக அவர், "இந்த ஆலயத்தை[28] இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" (யோவா. 2:19) என்று கூறினார். "அவரோ தம்முடைய சரீரமான ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" (வ. 21), ஆனால் அவரது விரோதிகள் அவரைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள் (வ. 20[29]), அவர்கள் தங்களைச் சுற்றிச் சூழ்ந்திருந்த சலவைக்கல் மற்றும் பொன் ஆகியவற்றினால் ஆன உயர்ந்து நின்ற கட்டிடத்தையே அவர் குறிப்பிட்டதாக நினைத்தார்கள்.[30]*

*இயேசு எருசலேமில் இருந்தபோது, அவர் வெளியரங்கமான தமது முதல் அற்புதத்தைச் செய்தார் (வ. 23). அந்த அற்புதங்களின் இயல்பு பற்றி நமக்குக் கூறப்படுவதில்லை, ஆனால் அவற்றில் நோயாளிகளைக் குணமாக்குதலும் உள்ளடங்கியிருந்திருக்கும் (மத். 4:23).[31] விசுவாசிகளின் குழு வளரத் தொடங்கிற்று (யோவா. 2:23), ஆனால் அவர்களின் விசுவாசம் மெல்லியது/இளைப்புள்ளது என்பதை இயேசு அறிந்தார் (வ. 24, 25).* The Living Bible *என்ற வேதாகமம், வசனம் 25ஐ, "மனித இயல்பு எவ்வளவாக மாறக்கூடியதாக இருக்கிறது என்பதை எவரொருவரும் அவருக்குக் கூறவேண்டியிருந்ததில்லை!" என்று பொழிப்புரைப்படுத்துகிறது.*

## *முதல் விரிவான உரை (யோவா. 3:1-21)*

*இயேசு எருசலேமில் இருந்தபோது, "யூதருக்குள்ளே அதிகாரியான"[32] நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் … இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து … (வ. 1, 2). நிக்கொதேமு "இராக்காலத்திலே" இயேசுவினிடத்தில் வந்து என்பது சில தனிச்சிறப்புடையதாக இருந்திருக்கலாம் (யோவா. 19:39); ஒருவேளை இது, அவரது பகுதியில் சில பதட்ட உணர்வைச் சுட்டிக்காண்பிக்கலாம்.[33] அவர் இயேசுவின் அற்புதங்களினால் மனங்கவரப்பட்டவர்களில் ஒருவராக இருந்தார் (2:23). அவர், "ரபீ,[34] நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" (3:2) என்று கூறினார்.*

*மனிதருடைய சிந்தனைகளை அறியக்கூடியவராக இருந்த இயேசு (2:24, 25), நிக்கொதேமு எதற்காக வந்தார் என்பதை அறிந்திருந்தார். அந்த யூதத்தலைவர், மேசியாத்துவ இராஜ்யத்தைப் பற்றிக் கேள்விகளைக் கொண்டிருந்தார் என்பது தெளிவு. அவர் இராஜ்யத்தைப் பற்றிய யூதர்களின் பொதுவான தவறான கருத்துக்களையும் கொண்டிருந்தார். இவ்விதமாக, கிறிஸ்து "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே[35] உனக்குச் சொல்லுகிறேன்" (3:3) என்று கூறினார்.*

*மறுபடியும் பிறத்தல் என்ற உருவகம் மனதில் ஆழமாகப் பதியக் கூடியதாக உள்ளது மற்றும் இது இயேசுவின் சீஷராகும் எவரொருவரையும் பண்புபடுத்த வேண்டிய மாபெரும் மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. ஆயினும், சீஷத்துவத்தின் நிபந்தனைகளை வரைக்குறிப்பிடுதல் என்பது*

[இவ்விடத்தில்] இயேசுவின் நோக்கமாக இருக்கவில்லை.[36] சபை நிலை நாட்டப்பட்ட பின்பு, கிறிஸ்தவராவதற்கு ஒருவர் "மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று ஒருவருக்கும் ஒருக்காலும் கூறப்படவில்லை. அதற்குப் பதிலாக, நேர்மையுடன் விசாரித்தவர்கள், விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டார்கள் (அப். 2:37, 38; 22:16).[37]

மாறாக, மேசியாத்துவ இராஜ்யத்தின் இயல்பை வலியுறுத்துதல் என்பதே இயேசுவின் நோக்கமாக இருந்தது: அது (இஸ்ரவேல் இராஜ்யம் இருந்தது போல) பூமிக்குரிய பிறப்பினால் பிரவேசிக்கக் கூடிய பூமிக்குரிய இராஜ்யம் அல்ல. மாறாக, அது பரலோகத்திற்குரிய ஒரு மறுபிறப்பினால் (அல்லது பண்பின் மாற்றத்தினால்) பிரவேசிக்கக்கூடிய ஒரு பரலோக இராஜ்யமாக இருந்தது. அது மனித சேனைகளின் அணிவகுப்பினால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு ராஜ்யமாக இருந்ததில்லை, ஆனால் தேவனுடைய ஆவியானவரின் செயல்பாட்டினால் பண்புபடுத்தப்பட்ட ஒன்றாக இருந்தது (வ. 6-8[38]). நிக்கொதேமுவுக்கு இவைகள் புதிய கருத்துக்களாய் இருந்தன, அவற்றைப் புரிந்துகொள்ள அவர் சிரமப்பட்டார் (வ. 4, 10).

இயேசுவின் அடிப்படைச் செய்தியானது யோவான் சுவிசேஷ விவரத்திற்கே உரிய தனிப்பட்ட விரிவாக்கப் பகுதி ஒன்றினால் பின்தொடரப்படுகிறது. யோவான் சுவிசேஷப் புத்தகமானது அதன் ஆழ்ந்த சிந்தனைக்குரிய பகுதிகளுக்காகக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இந்த வார்த்தைகள் நிக்கொதேமுவுடன் இயேசுவின் கலந்துரையாடலினுடைய தொடர்ச்சியா அல்லது இவைகள் யோவானின் ஏவுதல் பெற்ற விளக்கவுரை களா என்பதை நாம் அறியோம்.[39] எவ்வகையில் இருந்தாலும் இவைகள், சிந்தனையைத் தூண்டும் சத்தியங்களின் பெருக்கத்தைக் கொண்டுள்ளன - இவற்றில் இயேசு (சிலுவையில்) "உயர்த்தப்படுவார்" (வ. 14, 15) மற்றும் இயேசுவே கிறிஸ்து (மேசியா) என்று விசுவாசிக்க வேண்டியதன் அவசியம் (வ. 15, 16, 18) ஆகியவை உள்ளடங்கியிருக்கின்றன.

இந்த உரையாடலில் வேத வசனத்தில் நன்கு அறியப்பட்ட வசனப் பகுதியொன்றும் உள்ளடங்கியிருக்கிறது: யோவான் 3:16, இது "வேதாகமத்தின் தங்க வாக்கியம்" என்று அழைக்கப்படுகிறது. இது (சிலர் உரிமைகோருகிறபடியாக) இரட்சிப்பைப் பற்றி நாம் அறிய அவசியமான எல்லாவற்றையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் இது தேவன் நம்மீது கொண்டுள்ள அன்பு பற்றிய ஒரு அழகும் வல்லமையும் நிறைந்த கூற்றாக உள்ளது.

## யூதேயாவில் முதல் ஊழியம்[40] (யோவா. 3:22-36)

எருசலேமில் பண்டிகைக்குப் பின்பு, இயேசுவும் அவரது சீஷர்களும் பிரசங்கிப்பதற்கும் போதிப்பதற்கும் யூதேயாவின் நாட்டுப்புறங்களுக்குச் சென்றார்கள். இந்த ஊழியத்தின் கால அளவானது மூன்று முதல் எட்டு

மாதங்கள் வரையிலுமாக மதிப்பிடப்படுகிறது. இந்தக் காலகட்டத்தைப் பற்றி இரண்டு தகவல் துணுக்குகள் நமக்குத் தரப்பட்டுள்ளன. முதலாவது, கிறிஸ்து தமது சீஷர்களுடன் "நேரம் செலவிட்டுக் கொண்டிருந்தார்"; அவர்களுக்கு அவர் போதித்துக் கொண்டும், அவர்கள் அவரை அறிவதற்கு அனுமதித்துக் கொண்டும் இருந்தார். இரண்டாவது, அவர் தமது முன்னோடியானவர் செய்தது போலவே, "ஞானஸ்நானம்" கொடுத்துக் கொண்டிருந்தார் (வ. 22).[41]

யூதேயாவில் இயேசுவின் ஊழியமானது வெற்றிகரமாயிற்று என்பது தெளிவு, ஏனெனில் யோவானின் சீஷர்கள், "இதோ, அவர் ஞானஸ்நானங் கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள்" (வ. 26) என்று முறையிட்டார்கள். அடுத்த அத்தியாயமானது, "யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறார். (இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்") (யோவா. 4:1, 2) என்று எடுத்துரைக்கிறது.

இயேசுவின் வெற்றி [யோவான்] ஸ்நானனால் வரவேற்கப்பட்டது, ஆனால் அவருடன் [யோவானோடு] எஞ்சி நின்ற சீஷர்களினால் வரவேற்கப்படவில்லை. அவர்கள் பொறாமையினால் நிறைந்தார்கள் (வ. 26). தளபதிகளுக்கிடையில் நிலவிய பொறாமையினால் யுத்தங்கள் இழந்து போகப்பட்டுள்ளன. பொறாமை என்பது கர்த்தருடைய ஊழியத்தில் இசைவுக்கு ஒரு தொடர்ந்த அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

யோவானுடைய சீஷர்களின் முறையிடுதல்கள் அவரை, இயேசு யார் என்று மீண்டும் சாட்சி கொடுக்கும்படித் தூண்டின (வ. 27-35). [யோவான்] ஸ்நானன், இயேசுவை மேசியா என்று விசுவாசிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்:[42] "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (வ. 36). விசுவாசித்தல் மற்றும் கீழ்ப்படிதல் என்ற கருத்துக்கள் ஒன்றுக்குப் பதில் மற்றொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்.[43] இரட்சிக்கின்ற விசுவாசம் என்பது கீழ்ப்படிதலுள்ள விசுவாசமாக இருக்கிறது (யாக். 2:20; ரோமர் 1:5; 16:26 ஆகியவற்றைக் காணவும்).

யோவான் தமது சொந்தப் பணிப் பொறுப்பை மீண்டும் ஒருமுறை விவரிக்கையில் (வ. 28, 29), அவர் வேத வசனங்களில் மிகவும் மாண்புக்குரிய உணர்வுப்பூர்வமான கருத்துக்களைக் கூறினார்: "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்'' (வ. 30). நீங்கள் யாராயிருப்பினும் அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் படியிறங்கி இன்னொருவர் உங்கள் இடத்தை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டிய காலம் ஒன்று வரும். "அவர் (அல்லது அவள்) பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்று எவ்வித விரோதமும் இன்றி நாம் ஒவ்வொருவரும் கூற முடியுமென்றால், எவ்வளவு கடின உணர்வுகள் தவிர்க்கப்படும்!

## முடிவுரை

''ஆனால் நான் ஒருக்காலும் இதைச் செய்ததில்லையே'' என்று கூறுவதன் மூலம் சிலர் புதிய விஷயங்களை முயற்சி செய்ய மறுத்து விடுகின் றார்கள். இப்படிப்பட்ட தர்க்கம் மதிப்புள்ளதென்றால், ஏதொன்றும் ஒருக்காலும் முயற்சிக்கப்பட்டிராது. ஒரு குழந்தையானது ஒருக்காலும் தனது முதல் அடிவைப்பை எடுத்து வைக்காது அல்லது தனது முதல் வார்த்தையைப் பேசாது. ஒரு பிள்ளையானது ஒருக்காலும் வாசிக்கக் கற்றுக்கொள்ளாது. ஆண்களும் பெண்களும் ஒருக்காலும் புதிய திறன் களைக் கற்றுக்கொள்ள மாட்டார்கள். பெற்றோர்கள் ஒருக்காலும் பிள்ளைகளைக் கொண்டிருக்க மாட்டார்கள். பின்வருவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல் வேளை இருந்திருக்க வேண்டியுள்ளது. ஒரு புதிய பணிப்பொறுப்பானது நல்லதாகவும் அவசியமானதாகவும் உள்ளதென்றால், அதைச் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளுங்கள். நீங்கள் உங்களையே வியப்பில் ஆழ்த்தலாம்!

## குறிப்புகள்

இந்தப் பாடமானது மாபெரும் பிரசங்கங்களை ஏற்படுத்தும் வசனப்பகுதிகளினால் நிறைந்துள்ளது. இங்கு பல கருத்துக்கள் உள்ளன.

நமது குடும்பங்களையும் நண்பர்களையும் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவதன் மீதான ஒரு பிரசங்கத்திற்கு, அந்திரேயாவும் பிலிப்பும் எவ்வாறு மற்றவர்களை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள் என்ற கலந்துரையாடுதலானது ஒரு தொடக்க இடமாக இருக்க முடியும்.

''தேவ தூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும்'' (யோவா. 1:51) பற்றி நாத்தான்வேலிடம் இயேசுவின் வார்த்தைகள், ''யாக்கோபுவின் ஏணி'' என்ற பிரசங்கத்தின் அடிப்படை யாகப் பயன்படுத்தப்பட முடியும், இதில் ஆதியாகமம் 28:10-17ன் தொடக்க கால ''ஏணி''யை சிலுவையுடன் ஒப்பிட முடியும்.

''அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்'' (2:5) என்ற மரியாளின் வார்த்தைகள், கர்த்தர் நம்மை என்ன செய்யும்படி கூறுகின்றாரோ, அதின்படியெல்லாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியதன் முக்கியத்துவத்தின் மீதான ஒரு பிரசங்கத்திற்குத் தொடக்கக் கருத்தாக இருக்க முடியும்.

நிக்கொதேமுவின் பண்பு பற்றிப் படிக்கும் பிரசங்கம் ஒன்றைப் பிரசங்கிக்க முடியும். யோவான் 7:50-52 மற்றும் 19:39 ஆகிய வசனங்களில் அவர் பிற்பாடு தோன்றுகின்றார். அவரது வளர்ந்த விசுவாசம் மற்றும் பெருகிய தைரியம் ஆகியவற்றை வலியுறுத்த நீங்கள் விரும்பலாம்.

பெரும்பாலான பிரசங்கியார்கள் ''புதிய பிறப்பு'' என்பது பற்றி, குறைந்தது ஒரு பிரசங்கமாவது கொண்டுள்ளார்கள். அடுத்து வரும் துணைப்பாடத்தில் உள்ள சிந்தனைகளை விரிவாக்குவதன் மூலம் நீங்கள் ஒரு பிரசங்கத்தை ஏற்படுத்த விரும்பலாம்.

3:14ன் அடிப்படையில் ஒரு பிரசங்கம் அமைய முடியும். வெண்கல

*சர்ப்பத்திற்கும் சிலுவையில் கிறிஸ்துவுக்கும் இடையில் இணைவுகள் தரவழைக்கப்பட முடியும்.*

---

*குறிப்புகள்*

*[1]இந்த வரைக்குறிப்பானது, யோவான் 5:1ல் குறிப்பிடப்பட்ட "பண்டிகை" என்பது பஸ்காவாயிருந்தது என்று யூகிக்கிறது. [2]இது யோவானாக இருக்க வேண்டும் என்று நம்புவதற்குப் பல்வேறு காரணங் கள் உள்ளன: (1) பின்தொடரும் விவரங்கள் கண்ணால் கண்ட சாட்சியினால் கொடுக்கப்படுபவைகளாக உள்ளன; (2) யோவான் தமது பெயரைக் கூறாமல் இருந்து விடுவது என்பது அவருக்கு வழக்கமான நடைமுறையாக இருந்தது (அடுத்த குறிப்பைக் காணவும்); (3) இது யோவான் அல்லவென்றால், அவர் சீஷத்துவத் திற்கான தமது அழைப்பு பற்றி விவரம் எதையும் தரவில்லை என்றாகிறது. [3]பிற ஏழு சந்தர்ப்பங்களில், இவர் தமது பெயரைக் கூறாதிருந்தார் (யோவா. 13:23; 19:26, 35; 20:2-8; 21:7, 20, 24). [4]யூதர்கள் சூரியன் மறைவிலிருந்து உதயம் வரையிலும், சூரிய உதயத்திலிருந்து மறைவு வரையிலும் காலத்தைக் கணக்கிட்டார்கள். [5]இது எருசலேமின் அழிவிற்குப் பின்பு நீண்ட காலம் கழித்து எழுதப்பட்டதால், பிற்பாடு யோவான் ரோமர்களின் காலக் கணக்கைப் பயன்படுத்தியதால் (யோவா. 20:19ஐப் பற்றிய விளக்கங்களை பின்வரும் புத்தகம் ஒன்றில் காணவும்), காலை 10.00 மணி என்பதே இங்கு கூறப்பட்ட காலம் என்று பெரும்பாலான எழுத்தாளர்கள் நினைக்கின்றார்கள். [6]நாம் காணப் போகிறபடி, அவர்கள் தாங்கள் பயன்படுத்திய சொற்றொடர் களின் மறைவான குறிப்பிடுதல்கள் யாவற்றையும் புரிந்திருந்தது இல்லை ஆனால், குறைந்தபட்சம், அவர்கள் மேசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத் தரிசனங்களின் நிறைவேற்றமாக வந்தவர் இயேசுவே என்பதைப் புரிந்து கொண்டிருந்தார்கள். [7]"தேவதூதர்கள் மனு ஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதை யும்'' (வ. 51) என்ற இயேசுவின் இரகசியமான கூற்றானது அநேகமாகப் பழைய ஏற்பாட்டில் யாக்கோபின் ஏணி பற்றிய வரலாற்றின் அடிப்படையில் அமைந்து இருக்கலாம் (ஆதி. 28:12). இயேசு தமது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக மனிதர்கள் பரலோகத்தை அடைவதற்கு தேவனுடைய "ஏணியாக" ஆவார். [8]இந்த முடிவிற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றில், இயேசுவின் முதல் சீஷர்களில் எஞ்சியவர்கள் பிற்பாடு அப்போஸ்தலர்களாகத் தேர்ந்து கொள்ளப்பட்டார்கள் என்ற உண்மையுடன் உள்ளது.* J.W. *மெக்கார்வீ அவர்கள் சுட்டிக்காண்பித்தபடி, "நாத்தான்வேலைப் போல் உயர்வாகப் பாராட்டப் பட்டவர் வேறு யாரும் இல்லை"* (J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 111). *[9]யோவான் 1:35-51ல் ஐந்து சீஷர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படுகின் றார்கள்: நான்கு பேர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன, ஒருவர் பெயர் குறிப்பிடப்படுவதில்லை, அவர் அநேகமாக இந்த சுவிசேஷப் புத்தகத்தின் எழுத்தாளராக இருக்க வேண்டும். யோவானும் தமது சகோதரரான யாக்கோபுவைக் கண்டார் என்று சந்தர்ப்பப் பொருள் இவ்விடத்தில் உணர்த்துகிறது என்று சிலர் நினைக்கின்றார்கள். அப்படியென்றால், இயேசு வடக்கு நோக்கிப் பயணமாகுகை யில், சீஷர்களின் எண்ணிக்கை குறைந்தது ஆறு என்பதாக இருந்திருக்கும். [10]இயேசு, சீஷத்துவத்தின் அறைகூவல் பற்றி அடிக்கடி பேசினார் (லூக். 14:26, 27, 33; யோவா. 15:8). சபை ஸ்தாபனமான பிறகு, சபையின் உறுப்பினர் களைக் குறிப்பதற்கு "சீஷர்கள்" என்ற சொற்றொடர்தான் மிகவும் பொதுவானதாக இருந்தது (அப். 6:1, 2, 7; 9:1).*

[11]கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம் வரைபடமானது கானாவூர் நாசரேத்தின் வடக்குப் பகுதியில் சுமார் நான்கு மைல்கள் தொலைவில் அமைந்திருந்தது என்ற பாரம்பரியமான இட அமைவைச் சுட்டிக்காண்பிக்கிறது. இது நாசரேத்தூரின் வடக்கே பத்து அல்லது பன்னிரெண்டு மைல்கள் தொலைவில் இருந்தது என்று சில கல்வியாளர்கள் நினைக்கின்றார்கள். [12]‘‘வேளை’’ என்ற வார்த்தை யோவான் சுவிசேஷத்தில் அடிக்கடி வருகிறது, இது சிலுவையில் இயேசுவின் மரணத்திற்கான வேளையைக் குறிப்பதாக உள்ளது. (2:4; 4:21, 23; 5:25, 28; 7:30; 8:20; 12:23, 27; 13:1 ஆகியவற்றைக் காணவும்.) இயேசு, தமது அற்புதங்கள் தமது விரோதிகளின் கவனத்தை ஈர்க்கும் என்பதையும் [அதனால்] அவர்கள் தமது மரணத்தை விரைவுபடுத்தக் கூடும் என்பதையும் அறிந்தார். [13]நான் வாழ்கின்ற இடத்தில், ஒருவரின் தாயை “ஸ்திரீயே’’ என்று கூறுவது மரியாதையற்றதாகக் கருதப்படும். [14]Ernest O. Hauser, “Mary, Mother of Christ,” *Reader’s Digest* (December 1971): 171. [15]சடங்காச்சாரமான கழுவுதல்களுக்கென்று கல்லினால் ஆன ஆறு தண்ணீர் ஜாடிகள் இருந்தன (மாற். 7:3ஐக் காணவும்). கிரேக்க வசனம், இவைகள் ஒவ்வொன்றும் இரண்டு அல்லது மூன்று குடம் (metretai) பிடிக்கும் அளவுக்கு இருந்தன என்றும் இவை முழுவதும் நிரப்பப்பட்டன என்றும் குறிப்பிடுகிறது (யோவா. 2:7). இன்றைய நாட்களின் சொற்றொடர்களில், இந்த ஒவ்வொரு கற்சாடியும், சுமார் இருபது அல்லது முப்பது குடங்கள் (அல்லது 75 முதல் 115 லிட்டர்கள்) கொண்டதாக இருக்கும். [16]ஒரு பங்கு திராட்சரசமும்/மதுபானமும் ஆறு பங்கு தண்ணீரும் கலந்த பானம் அந்த நாட்டில் சாதாரணமாகக் குடிக்கும் பானமாக இருந்தது என்று சில வேளைகளில் குறிப்பிடப்படுகிறது. [17]வசனம் பத்தின் பாதி மேற்கோள் தரும் வார்த்தைகள் இந்தத் திராட்ச ரசம் மதுபானம் கொண்டிருந்ததா அல்லவா என்பதைப் பொறுத்தமட்டில் உண்மை யாயிருக்கும். [18]அதாவது, இவ்வார்த்தையானது பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில் (செப்துவஜிந்த்தில்) உள்ளது. [19]அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் பற்றிய கூடுதலான விவரங்களுக்கு, இப்புத்தகத்தில் முன்புள்ள “யோவான் சிவிசேஷம்: தேவகுமாரனாகிய கிறிஸ்து’’ என்ற பாடத்தில் காணவும். [20]கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம் என்ற வரைபடத்தில் காணவும்.

[21]பேதுருவும் அந்திரேயாவும் பிற்பாடு கப்பர்நகூமுக்குச் சென்றார்கள் என்பது உறுதி (மாற். 1:21, 29). [22]பஸ்கா பண்டிகையானது எகிப்தில் தங்கள் வீட்டுக் கதவுகளில் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தெளித்து இருந்த இஸ்ரவேலர்களின் வீடுகளைத் தேவன் ‘‘கடந்து சென்றதன்’’ [pass over] நினைவாகக் கொண்டாடப்பட்டது (யாத். 12:1-28). இந்தப் புத்தகத்தில் உள்ள “யூதர்களின் பண்டிகைகள்’’ என்ற அட்டவணையில் காணவும். [23]யோவான் சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பஸ்கா பண்டிகையின் தனிச் சிறப்புக்களுக்கு, “கிறிஸ்துவின் சொந்த ஊழியம் எவ்வளவு நாட்கள் நடைபெற்றது” என்ற துணைப்பாடத்தில் காணவும். [24]இது இயேசுவின் ஊழியத்தின் கடைசி வாரத்தில் தேவாலயம் சுத்திகரிக்கப் பட்ட நிகழ்ச்சியுடன் குழப்பிக் கொள்ளப்படக் கூடாது (மத். 21:12, 13). [25]இது ஒரு நிரந்தரமான நிபந்தனையாக இருக்க வேண்டும் என்ற சுட்டிக் காண்பித்தல் இல்லையென்றாலும் கூட, யூத அதிகாரிகள் இதை யாத்திரகமம் 30:13ன் அடிப்படையில் அமைத்துள்ளார்கள். மத்தேயு 17:24-27ன் நிகழ்ச்சியானது இந்த வரி செலுத்துதல் பற்றியதாக உள்ளது. [26]இந்தப் புத்தகத்தில் உள்ள “யூதர்களின் பண்டிகைகள்” என்ற அட்டவணை யில் காணவும். [27]“ஆலயம்” என்பதற்கு கிரேக்க மொழியில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. அவற்றில் ஒன்று (naos) தேவாலயத்தின் பரிசுத்த இடத்தைக் குறிப்பிட்டது. இன்னொன்று (hieron) புறஜாதியாரின் மண்டபம் உட்படத் தேவாலய வளாகம் முழுமையையும் குறிப்பிட்டது. இவற்றில்

பிந்தியதே இவ்விடத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. புறஜாதியாரின் மண்டபம் [தேவாலயத்தில்] அமைந்துள்ள இடத்தை, தேவாலயத்தின் வரைபடத்தில் காணவும். [28]இவ்விடத்தில் ''தேவாலயம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை *naos* என்பதாகும். [29]நாற்பத்தி ஆறு வருடங்கள் என்ற குறிப்பானது இயேசு எப்போது பிறந்தார் என்பதைக் கணக்கிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ''கிறிஸ்து எப்போது பிறந்தார்?'' என்ற பாடத்தில் காணவும். [30]இயேசுவின் இந்தக் கூற்றானது அவர்களிடம் ஒரு மனப்பதிவை ஏற்படுத்திற்று. இந்த முன்னுரைத்தல் பற்றிய அவர்களின் தவறான புரிந்து கொள்ளுதலானது கிறிஸ்துவின் மீது விசாரணையைக் கொண்டு வந்தது (மாற். 14:58).

[31]இந்த வேளையில் இயேசு அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்பதற்கான சுட்டிக் காண்பித்தல் எதுவும் இல்லை. இதைப் பற்றிப் பதிவு செய்யப்பட்ட முதலாவது விவரமானது மாற்கு 1:23-28லும் லூக்கா 4:33-37லும் காணப்படுகிறது. ஆவிகளைத் துரத்துதல் என்பது இயேசுவின் வல்லமையினுடைய ஒரு புதிய வெளிப்பாடாக இருந்தது என்பதை, அந்த வேளையில் ஏற்பட்ட திகைப்பு சுட்டிக் காண்பிக்கலாம். [32]நிக்கொதேமு ஆலோசனை சங்கத்தின் உறுப்பினராக இருந்தார் என்பது தெளிவு (யோவா. 7:45-52ஐக் காணவும்). ஆலோசனை சங்கம் பற்றிய தகவலுக்கு, "கிறிஸ்து வந்த வேளையில் இருந்த உலகம்" என்ற பாடத்தில் காணவும். [33]இதற்கு மறுபுறத்தில், இது இயேசுவும் நிக்கொதேமுவும் ஒன்றுகூட இயன்ற ஒரே ஒரு வேளையாக மட்டும் இருந்திருக்க முடியும். [34]"ரபீ" என்பது மரியாதைக்குரிய ஒரு கனப்படுத்தும் பட்டப் பெயராக இருந்தது, நிக்கொதேமு அதை இயேசுவுக்கு உபயோகித்தார். [35]KJVயில் "verily, verily" என்றுள்ளது. "Truly" மற்றும் "verily" ஆகியவை கிரேக்க வார்த்தையாகிய "ஆமென்" என்பதன் மொழிபெயர்ப்பாக இருக்கின்றன, இது "அவ்வாறே ஆகட்டும்'' என்று அர்த்தப்பட முடியும். இந்த வார்த்தையானது மீண்டும் திரும்பக் கூறப்படுதல் என்பது "நான் கூறுவது உண்மை!" என்று உறுதிபட வலியுறுத்துவதாக இருக்கிறது. [36]புதிய பிறப்பு பற்றிய இயேசுவின் வார்த்தைகளில், கிறிஸ்தவராவதற்குரிய நிபந்தனைகள் மறைமுகமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன: விசுவாசம் என்பது பல வேளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது (வ. 15, 16). ஆண்டுகளினூடே பெரும் பாலானவர்கள் ''ஜலத்தினால் பிறத்தல்'' (வ. 5) என்பது ஞானஸ்நானத்தைக் குறிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். இருந்தபோதிலும், இயேசு இந்த நிபந்தனைகளையல்ல ஆனால் இராஜ்யத்தின் இயல்பையே இவ்விடத்தில் வலியுறுத்தினார். [37]இந்தக் கட்டளைகளுக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிந்தபோது அவர்கள் ''மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்டதாகப்" பிற்பாடு பேதுரு கூறினார் (1 பேது. 1:22, 23). [38]காற்றைப் பற்றிய இயேசுவின் விவரிப்பானது வார்த்தைகளின் விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்துகிறது: ''காற்று'' என்பதற்கான கிரேக்க வார்த்தையானது "ஆவி" என்பதற்கான கிரேக்க வார்த்தையைப் போன்றதாகவே உள்ளது. நாம் காற்றைக் காண முடியாது, ஆனால் அதன் பிரசன்னத்தினுடைய விளைவை நாம் காண முடியும். ஆவியின் செயலும் இது போன்றதாகவே உள்ளது. [39]இவற்றை இயேசுவின் வார்த்தைகளாக எடுத்துக் கொள்ளுவதே மிக எளிய அணுகுமுறையாக உள்ளது, NASB இதை இவ்வாறே எடுத்துக் கொண்டுள்ளது. [40]இயேசு தமது ஊழியத்தில் பிற்பாடு, மூன்று மாதமளவாக யூதேயாவில் போதிப்பார்.

[41]இந்த ஞானஸ்நானம், யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தின் தொடர்ச்சியாக இருந்தது என்பது உறுதி, ஆகையால் இது ஒரு ஆயத்த ஞானஸ்நானமாகவே இருந்தது. [42]நிக்கொதேமுவுடனான இயேசுவின் உரையாடலில் உள்ளது போலவே, இவ்வசனப்பகுதியிலும், பேசுகிறவரின் வார்த்தை எவ்விடத்தில் முடிகிறது மற்றும் சுவிசேஷ எழுத்தாளரின் வார்த்தை எவ்விடத்தில் தொடங்குகிறது என்று அறிவது

*மிகவும் கடினமானதாக உள்ளது. இவ்வார்த்தைகள் யாவும் யோவான் ஸ்நானனால் கூறப்பட்டதாக NASB உரித்தாக்குகிறது. [43]இவ்வசனத்தில், KJV மொழிபெயர்ப்பானது ''விசுவாசிக்கிற'' என்ற வார்த்தையை இருமுறை கொண்டுள்ளது, தமிழிலும் இவ்வாறே உள்ளது. ஆனால் மிகச் சிறந்த கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் மாறுபட்ட இரு வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன.*